www.Padasalai.Net www.TrbTnpsc.com

Kanchipuram District

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

பதிவு எண் :

நேரம் : 3.00 மணி

பகுதி - அ

மதிப்பெண்கள் : 90

20 x 1 = 20

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஒரு வணிக நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது
   அ) குறிப்பேடு ஆ) இருப்பாய்வு இ) இருப்பு நிலை குறிப்பு ஈ) பேரேடு
2. இந்தியாவில் கணக்கைகள் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
   அ) இந்திய மைய வங்கி
   ஆ) இந்திய அடக்க விலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
   இ) உச்சநீதிமன்றம்
   ஈ) இந்திய பட்டய கணக்காளர் நிறுவனம்.
3. முன்கூட்டி செலுத்திய வாடகை ஒரு
   அ) பெயரளவு கணக்கு ஆ) ஆள்சார் கணக்கு
   இ) சொத்து கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
4. கணக்கியல் சமன்பாடு எந்த கணக்கியல் கோட்பாட்டின் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது
   அ) இரட்டைத் தன்மை ஆ) நிலைத்தன்மை
   இ) நிறுவனத் தொடர்ச்சி ஈ) நிகழ்வு தன்மை
5. பேரேட்டு கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம்
   அ) நிதி நிலைமையை அறிய
   ஆ) இலாபம் அல்லது நட்டத்தை அறிய
   இ) நிதிநிலைமை மற்றும் இலாப நட்டத்தை அறிய
   ஈ) ஒவ்வொரு பேரேட்டு கணக்கில் இருப்பை அறிய
6. பற்று இருப்புகளும் வரவு இருப்புகளும் சமமாக இருக்கின்றனவா என அறிய அனைத்து பேரேட்டு கணக்குகளையும் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு பட்டியல்.
   அ) குறிப்பேடு ஆ) நாளேடு இ) இருப்பாய்வு ஈ) இருப்பு நிலை குறிப்பு
7. நிலை சொத்துக்கள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்ய வேண்டிய ஏடு
   அ) கொள்முதல் ஏடு ஆ) விற்பனை ஏடு
   இ) கொள்முதல் திருப்ப ஏடு ஈ) உரிய குறிப்பேடு
8. விற்பனை ஏட்டில் பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் அடிப்படை ஆவணம்
   அ) பற்றுக் குறிப்பு ஆ) வரவு குறிப்பு
   இ) இடாப்பு ஈ) ரொக்க இரசீது
9. தள்ளுபடி ரொக்கம் மற்றும் வங்கி பத்திகள் உடைய ரொக்க ஏட்டை இவ்வாறு அழைக்கலாம்
   அ) சாதாரண ரொக்க ஏடு ஆ) இருபத்தி ரொக்க ஏடு
   இ) மூப்பத்தி ரொக்க ஏடு ஈ) சில்லறை ரொக்க ஏடு
10. வங்கி சரிகட்டும் பட்டியல் தயாரிக்கப்படுவது
    அ) வங்கியரால் ஆ) வணிகத்தால்
    இ) வணிகத்தின் கடனாளிகளால் ஈ) வணிகத்தின் கடனீந்தோரால்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



11. அதியமான் இடமிருந்து கடனுக்கு அறைகலன் வாங்கியது கொள்முதல் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது. இப்பிழை திருத்தம் செய்யும்போது கீழ்க்கண்டவற்றில் எந்த கணக்கை பற்று வைக்க வேண்டும்.
அ) கொள்முதல் கணக்கு ஆ) அதியமான் கணக்கு
இ)அறைகலன் கணக்கு ஈ) இவை எதுவும் இல்லை

12. நேர்க்கோட்டு முறையில் தேய்மான தொகையானது
அ) ஆண்டுதோறும் அதிகரிக்கும்
ஆ) ஆண்டுதோறும் குறையும்
இ) அனைத்து ஆண்டுகளுக்கும் நிலையாக இருக்கும்
ஈ) ஆண்டுதோறும் மாறக்கூடியது

13. எந்த நாள் முதற்கொண்டு தேய்மானம் கணக்கிடப்பட வேண்டும்?
அ) சொத்தினை பயன்பாட்டிற்கு இட்ட நாள் முதல்
ஆ) சொத்தினை வாங்குவதற்கான ஆணை பிறப்பித்த நாள் முதல்
இ) சொத்தினை வியாபார வளாகத்திற்குள் பெற்ற நாள் முதல்
ஈ) சொத்தின் இடாப்பு பெற்ற நாள் முதல்

14. நிலைச் சொத்து மீதான பேரளவு பழுதுபார்ப்பு செலவு ஒரு
அ) வருவாயின செலவு ஆ) முதலின செலவு
இ) நீள் பயன் வருவாயின செலவு ஈ) இவை எதுவும் இல்லை.

15. உள்தூக்கு கூலி எதில் காண்பிக்கப்படும்?
அ) வியாபார கணக்கில் ஆ) இலாப நட்ட கணக்கில்
இ)கடன் பக்கத்தில் ஈ) சொத்து பக்கத்தில்

16. நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?
அ) ஓர் நடப்பு சொத்து ஆ) ஓர் நீர்மை சொத்து
இ) புலனாகும் சொத்து ஈ) புலனாக சொத்து

17. முன்கூட்டி செலுத்திய காப்பீட்டு முனைமம் தோன்றுவது
அ) வியாபார கணக்கில் பற்றுப் பக்கம் ஆ) இலாப நட்ட கணக்கில் வரவு பக்கம்
இ) இருப்பு நிலை குறிப்பின் சொத்துக்கள் பக்கம்
ஈ) இருப்பு நிலை குறிப்பின் பொறுப்புக்கள் பக்கம்.

18. வெளியீட்டு சாதனத்திற்கு ஒரு உதாரணம்
அ) சுட்டி ஆ) அச்சுப்பொறி இ)ஒளியியல் வருடி ஈ) விசைப்பலகை

19. Tally என்பது இதற்கு உதாரணமாக இருக்கிறது
அ) உருவாக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்
ஆ) ஆயத்த கணக்கியல் மென்பொருள்
இ) உள் கட்டமைக்கப்பட்ட மென்பொருள்
ஈ) திருத்தியமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

20. சம்பளம் ஒரு ________.
அ) நேரடி செலவு ஆ) மறைமுக செலவு
இ) முக்கிய செலவு ஈ)இவை எதுவும் இல்லை

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7 x 2 = 14

21. கணக்கியல் செயல்பாட்டில் உள்ள படிநிலைகள் யாவை?

22. பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என வகைப்படுத்துக.

i) முதல் ii) கட்டிடம்
iii) வங்கி iv) தள்ளுபடி பெற்றது

23. கீழ்காணும் விவரங்களைக் கொண்டு இராம்நாத் அவர்களின் ஏடுகளில் தொடக்கப் பதிவினை தருக.

| | |
|---|---|
| ரொக்கம் | ₹30,000 |
| அறைகலன் | ₹3,000 |
| சரக்கிருப்பு | ₹15,000 |
| கடனீத்தோர் | ₹10,000 |

24. தேய்மானம் என்றால் என்ன?

25. நேரடி செலவுகள் ஏதேனும் நான்கினை பட்டியலிடுக?

26. கணினி மைய கணக்கியல் முறை என்றால் என்ன?

27. இருப்பாய்வின் படிவம் தருக?

28. பின்வரும் விவரங்களைக் கொண்டு திரு.ஜெயக்குமார் என்பவரின் 2016 டிசம்பர் 1ம் நாளைய வங்கி சரிகட்டும் பட்டியல் தயாரிக்க

| | | |
|---|---|---|
| அ) | ரொக்க ஏட்டின் படி இருப்பு | ₹7,130 |
| ஆ) | செலுத்திய காசோலை வசூல் ஆகாதது | ₹1,000 |
| இ) | வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது | ₹800 |

29. சில்லறை ரொக்க ஏடு என்றால் என்ன?

30. அ) முதல் மீது வட்டி நிறுவனத்திற்கு வருமானமா? அல்லது செலவா?

ஆ) முதல் மீது வட்டி இலாப நட்ட கணக்கில் எந்த பக்கத்தில் தோன்றும்?

பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21

31. பொருத்துகை கருத்து என்றால் என்ன? ஏன் ஒரு வணிக அமைப்பு இக்கருத்தை பின்பற்ற வேண்டும்?

32. கீழ்க்கண்ட விபரங்களில் இருந்து நேர்கோட்டு முறையில் தேய்மான விகிதம் கணக்கிடுக. சொத்தின் அடக்கவில்லை ₹10,000 எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்-10 வருடம், இறுதி மதிப்பு ₹1,000

33. பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாக பேரேட்டில் பதிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 2023 மார்ச் | 1. | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | ₹10,000 |
| | 3. | வாடகை ரொக்கமாக செலுத்தியது | ₹6,000 |
| | 6. | வங்கியில் இருந்து ரொக்கம் எடுத்தது | ₹15,000 |

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



34. கணக்கியல் சமன்பாட்டினை கண்டறிக.

| | சொத்துக்கள் | = | முதல் | + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| அ) | ₹40,000 | = | ₹,30,000 | + | ? |
| ஆ) | ? | = | ₹,50,000 | + | ₹40,000 |
| இ) | ₹80,000 | = | ? | + | ₹30,000 |

35. பின்வரும் விவரங்களை கொண்டு தனி பத்தி ரொக்க ஏட்டை தயாரிக்க.

| | | | |
|---|---|---|---|
| 2020 ஜூன் | 2. | தொழில் தொடங்கியது | ₹40,000 |
| | 5. | சுவாதியிடம் பெற்ற ரொக்கம் | ₹4,000 |
| | 7. | கூலி ரொக்கமாக செலுத்தியது | ₹2,000 |
| | 12. | சசிகலாவிடமிருந்து ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | ₹6,000 |

36. இரட்டை பதிவு முறையின் பொன்னான விதிகளை எழுதுக?

37. கீழ்க்கண்ட பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும்போது கண்டறியப்பட்டன அவற்றை திருத்தம் செய்யவும்

i) உரிமையாளரின் தனிப்பட்ட செலவு ரூபாய் ₹600 பயணச் செலவு கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது

ii) கடனுக்கு ரூபாய் ₹400 ரமேஷ் இடமிருந்து சரக்கு வாங்கியது தவறாக கணேஷ் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

iii) மதிக்கு ரூபாய் ₹500 சம்பளம் செலுத்தியது பேரேட்டில் மதியின் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது

38. இருப்புநிலை குறிப்பிற்கும் இருப்பாய்விற்கும் உள்ள வேறுபாட்டினை ஏதேனும் மூன்று தருக?

39. கீழ்காணும் தகவல்கள் இருந்து 2021 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார கணக்கை தயாரிக்கவும்?

| | |
|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | ₹10,000 |
| கொள்முதல் | ₹26,100 |
| விற்பனை | ₹40,600 |
| இறுதி சரக்கிருப்பு | ₹13,500 |

40. பல்வேறு வகையான கணக்கியல் மென்பொருள்கள் யாவை?

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35**

41. அ) கீழ்காணும் விவரங்களை கொண்டு நேரடியாக பேரேட்டு கணக்குகளில் பதிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 2023 ஜூன் | 5 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | ₹1,00,000 |
| | 8. | வங்கியில் பணம் செலுத்தியது | ₹60,000 |
| | 12. | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | ₹45,000 |
| | 15. | மின்கட்டணம் ரொக்கமாக செலுத்தியது | ₹6,000 |
| | 18. | ரொக்கத்திற்க்கு சரக்கு வாங்கியது | ₹22,000 |

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



*(அல்லது)*

ஆ) பின்வரும் விவரங்களை கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்?

| | | | |
|---|---|---|---|
| கை ரொக்கம் | ₹5,500 | தொடக்க சரக்கிருப்பு | ₹6,000 |
| பெற்ற தள்ளுபடி | ₹300 | நேரடி செலவுகள் | ₹5,000 |
| கடனீந்தோர் | ₹15,000 | வெளி தூக்கு கூலி | ₹3,500 |
| கட்டிடம் | ₹50,000 | முதல் | ₹45,000 |
| கொள்முதல் | ₹49,700 | விற்பனை | ₹59,400 |

42. அ) பின்வரும் குறிப்பேட்டு பதிவுகளை நிறைவு செய்க?

| தேதி | விவரம் | பே.ப.எ | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 2023 ஜனவரி-1 | ரொக்க க/கு ப<br>ஜெயசீலி முதல் க/கு<br>(.............................) | | ₹80,000 | ₹80000 |
| 2023 ஜனவரி-2 | கொள்முதல் க/கு ப<br>.................. க/கு<br>(ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது) | | ₹40,000 | ₹40,000 |
| 2023 ஜனவரி-5 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு<br>(ரொக்கத்திற்கு விற்பனை செய்தது) | | ₹60,000 | ₹.......... |
| 2023 ஜனவரி-8 | ................ க/கு ப<br>................ க/கு<br>(ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது) | | ₹7,000 | ₹7,000 |
| 2023 ஜனவரி-12 | .......... க/கு ப<br>............. க/கு<br>(மின் கட்டணம் இணைய வங்கி மூலம்செலுத்தியது) | | ₹1,000 | ₹1,000 |

*(அல்லது)*

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஆ) ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனம் நடத்தும் இராணியின் பின்வரும் விவரங்களை கொண்டு கணக்கியல் சமன்பாட்டின் படி பதிவு செய்க.

i) ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது - ₹1,50,000
ii) வங்கியில் செலுத்திய ரொக்கம் ₹60,000
iii) வங்கியிலிருந்து கடன் பெற்றது ₹25,000
iv) காசோலை செலுத்தி சரக்கு வாங்கியது ₹10,000
v) சொந்த பயன்பாட்டிற்கு ரொக்கம் எடுத்தது ₹6,000

43. (அ) பின்வரும் விவரங்களிலிருந்து டிசம்பர் 31, 2017 நாளுக்குரிய ரொக்க ஏட்டின் படி இருப்பை கண்டறிக.

i) வங்கி அறிக்கையின் படி மேல்வரைபற்று ₹6,500
ii) வங்கியில் செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படவில்லை ₹10,500
iii) விடுத்த காசோலை இன்னும் செலுத்தகைக்கு முன்னிலைப்படுத்தபடாதது ₹3,000
iv) வங்கியால் தவறுதலாக பற்று வைக்கப்பட்டது ₹500
v) வங்கியால் பற்று வைக்கப்பட்டவங்கி கட்டணம் மற்றும் வட்டி ₹180
vi) நிலையை அறிவுறுத்தலின்படி வங்கியால் செலுத்தப்பட்ட காப்பீட்டு முனைமம் ₹100

*(அல்லது)*

ஆ) கீழ்க்கண்ட விபரங்களில் இருந்து முன்பணம் மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டை தயாரிக்கவும்

| | | | |
|---|---|---|---|
| 2017 ஜனவரி | 1 | காசாளரிடம் இருந்து முன்பணம் பெற்றது | ₹500 |
| | 2 | பயணச் செலவுக்கு கொடுத்தது | ₹5 |
| | | வண்டி கட்டணம் கொடுத்தது | ₹12 |
| | 3 | தபால் செலவு செய்தது | ₹15 |
| | | தற்காலிக வேலையாட்களுக்கு கூலி கொடுத்தது | ₹66 |
| | 4 | எழுதுபொருள் வாங்கியது | ₹134 |
| | | போக்குவரத்து செலவுகள் | ₹18 |
| | 5 | பழுதுபார்ப்பு செலவு செய்தது | ₹65 |
| | | பேருந்து கட்டணம் | ₹11 |
| | | வண்டி கட்டணம் | ₹24 |

44. அ) ஜனவரி 1, 2018 அன்று ₹50,000 சொத்து ஒன்று வாங்கப்பட்டது. ஆண்டுதோறும் நேர்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்படவேண்டும். அச்சத்தின் எதிர்நோக்கும் பயனளிக்கும் காலம் 10 ஆண்டுகள், மற்றும் அதன் இறுதி மதிப்பு ₹10,000. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31 இல் கணக்குகள் முடிக்கப்படுகின்றன. தேய்மான விகிதம் கணக்கிட்டு இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பேட்டு பதிவுகள் தரவும்.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



(அல்லது)

ஆ) பின்வருவன முதலினமாஅல்லது வருவாயினமா என்பதை கூறுக

i) ஏற்கனவே உள்ள கட்டிடத்தை கூடுதலாக கட்டியது ₹8,000

ii) பழைய மகிழுந்து வாங்கியது ₹30,000
மேலும் அதனை உடனடியாக பழுது பார்த்து அதற்கான செலவு ₹2,000

iii) புதிய தொழிற்சாலைக்கு வர்ணம் பூசியது ₹10,000

iv) புதிய இயந்திரம் மீதான ஏற்று செல் வண்டி கட்டணம் ₹150

v) வாங்கிய பழைய வாகனத்தை பழுது பார்த்து அதற்கான செலவு₹1,500

45. அ) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து ராமசுந்தரி என்பவரின் ஏடுகளில் 2017 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார இலாப நட்ட கணக்கையும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | ₹2,500 | விற்பனை | ₹7,000 |
| கூலி | ₹2,700 | கொள்முதல் | ₹3,300 |
| இறுதி சரக்கிருப்பு | ₹4,000 | சம்பளம் | ₹2,600 |
| பெற்ற தள்ளுபடி | ₹2,500 | முதல் | ₹52,000 |
| இயந்திரம் | ₹52,000 | வங்கி ரொக்கம் | ₹6,400 |
| கடனீந்தோர் | ₹8,000 | | |

(அல்லது)

ஆ) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து இலாப நட்ட தயாரிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| மொத்த இலாபம் | ₹50,000 | வட்டி பெற்றது | ₹2,000 |
| அலுவலக வாடகை | ₹10,000 | தள்ளுபடி பெற்றது | ₹3,000 |
| சொத்துக்கள் மீதான தேய்மானம் | ₹8,000 | வெளி தூக்கு கூலி | ₹2,500 |
| தள்ளுபடி கொடுத்தது | ₹12,000 | அலுவலகக் கட்டிடம் மீதான காப்பீடு | ₹3,500 |
| விளம்பரம் | ₹4,000 | பொது செலவுகள் | ₹3,000 |
| தணிக்கை கட்டணம் | ₹1,000 | உள் ஏற்று செல் செலவுகள் | ₹1,000 |

46. அ) பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும் போது கண்டறியப்பட்டன அவற்றை திருத்தவும்.

i) அகிலாவுக்கு ₹1520 கடனுக்கு சரக்கு விற்றது அவர் கணக்கில் ₹1250 என எழுதப்பட்டுள்ளது

ii) நரேந்திரன் என்பவரிடம் கடனுக்கு ₹5500 சரக்கு கொள்முதல் செய்தது அவர் கணக்கில் ₹5050 என வரவு வைக்கப்பட்டுள்ளது

iii) ரவிவர்மன் இடமிருந்து கடனுக்கு ₹404 அறைகலன் வாங்கியது அறைகலன்கள் ₹440 என பற்று வைக்கப்பட்டுள்ளது

iv) ₹2,000 ரொக்கத்திற்கு இயந்திரம் வாங்கியது பேரேட்டில் இயந்திர கணக்கில் எடுத்து எழுதப்படாமல் உள்ளது

v) கொள்முதல் எட்டின் கூட்டுத்தொகை ₹899 முன் எடுத்து எழுதும்போது ₹989 எழுதப்பட்டுள்ளது

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



*(அல்லது)*

ஆ) கீழ்காணும் சரிகட்டுதல்களுக்கு சரிகட்டு பதிவுகளைத் தருக.

i) இறுதி சரக்கிருப்பு ₹2,000

ii) கொடுபட வேண்டிய செலவுகள் (எ. கா. வாடகை ₹2,500)

iii) முன்கூட்டி செலுத்திய செலவுகள் (எ. கா. காப்பீட்டு முனைமம் ₹2,850)

iv) முதல் மீது வட்டி ₹11,000

v) எடுப்பு மீது வட்டி₹1,000

47. அ) கீழ்க்காணும் நடவடிக்கைகளை கொண்டு திரு ராஜன் என்பவரின் ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகள் உடைய ரொக்க ஏட்டில் பதிவு செய்க

2020 அக்டோபர் 1. ரொக்க இருப்பு ₹37,500

4. ரொக்க விற்பனை ₹33,000

6. வேலனுக்கு செலுத்திய ரொக்கம் ₹15,850 அவர் அனுமதித்த தள்ளுபடி ₹150

8. சுப்பிரமணி என்பவரிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹14,300

12. சுப்பிரமணிக்கு ரொக்கம் செலுத்தி கணக்கை தீர்த்துக் கொண்டது ₹14,200

15. விளம்பர செலவுகளுக்காக ரொக்கம் செலுத்தியது ₹1,500

*(அல்லது)*

ஆ) கணினிமைய கணக்கியல் முறையில் நன்மைகள் ஏதேனும் ஐந்தினை விவரி?

******

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# காஞ்சிபுரம் மாவட்டம்

## இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

## 11 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 20 X 1 = 20

| | | |
|---|---|---|
| 1 | இ | இருப்பு நிலைக் குறிப்பு |
| 2 | ஈ | இந்தியப் பட்டயக்கணக்காளர் நிறுவனம் |
| 3 | ஈ | பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு |
| 4 | அ | இரட்டைத் தன்மை |
| 5 | ஈ | ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய |
| 6 | இ | இருப்பாய்வு |
| 7 | ஈ | உரிய குறிப்பேடு |
| 8 | இ | இடாப்பு |
| 9 | இ | முப்பத்தி ரொக்க ஏடு |
| 10 | ஆ | வணிகத்தால் |
| 11 | இ | அறைகலன் கணக்கு |
| 12 | இ | அனைத்து ஆண்டுகளுக்கும் நிலையாக இருக்கும் |
| 13 | அ | சொத்தினை பயன்பாட்டிற்கு இட்ட நாள்முதல் |
| 14 | ஆ | முதலினச் செலவு |
| 15 | அ | வியாபாரக் கணக்கில் |
| 16 | ஈ | புலனாகாச் சொத்து |
| 17 | இ | இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம் |
| 18 | ஆ | அச்சுப்பொறி |
| 19 | ஆ | ஆயத்த கணக்கியல் மென்பொருள் |
| 20 | ஆ | மறைமுக செலவு |

### பகுதி - ஆ

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

**21. கணக்கியல் செயல்பாட்டிலுள்ள படிநிலைகள் யாவை?**

1) நடவடிக்கைகளை இனம் கண்டு குறிப்பேட்டில் பதிவு செய்தல்
2) எடுத்தெழுதுதல் மற்றும் இருப்புக் கட்டுதல்
3) இருப்பாய்வு தயாரித்தல்
4) வியாபாரக் கணக்கு தயாரித்தல்
5) இலாபநட்டக் கணக்கு தயாரித்தல்
6) இருப்பு நிலைக்குறிப்பு தயாரித்தல்



**22.**

| வ.எண் | விவரம் | வகைப்பாடு |
|---|---|---|
| (i) | முதல் | ஆள்சார் கணக்கு |
| (ii) | கட்டிடம் | சொத்து கணக்கு |
| (iii) | வங்கி | ஆள்சார் கணக்கு |
| (iv) | கழிவு பெற்றது | பெயரளவு கணக்கு |

**23.** இராம்நாத்தின் தொடக்கப் பதிவு

| நாள் | விவரம் | | பே.ப. எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|---|
| | ரொக்கம் க/கு | ப | | 30,000 | |
| | அறைகலன் | ப | | 3,000 | |
| | சரக்கிருப்பு க/கு | ப | | 15,000 | |
| | கடனீந்தோர் க/கு | | | | 10,000 |
| | இராம்நாத் முதல் க/கு (சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கொணரப்பட்டது) | | | | 38,000 |

**24. தேய்மானம் என்றால் என்ன?**

- நிலைச் சொத்தின் அடக்க விலையை, அதனுடைய பயனளிப்புக்காலத்திற்கு ஒதுக்கீடு செய்யும் செயல்முறை தேய்மானம் ஆகும்.

**25. நேரடிச் செலவுகள் ஏதேனும் நான்கினை பட்டியலிடுக**

1. கூலி
2. உள்தூக்குக் கூலி
3. துறைமுகக் கட்டணம்
4. உள்நுழைவு வரி
5. இறக்குமதி வரி
6. உரிமைத்தொகை

**26. கணினிமயக் கணக்கியல் முறை என்றால் என்ன?**

- கணினிமயக் கணக்கியல் முறை என்பது, கணினியைப் பயன்படுத்தி கணக்குகளைப் பராமரிக்கும் முறை ஆகும்.

**27. இருப்பாய்வின் படிவம் தருக**

------------- ஆம் நாளன்றைய இருப்பாய்வு

| வ.எண் | கணக்கின் பெயர் / விவரம் | பே.ப. எ | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| | | | | |



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

28.

**திரு. ஜெயக்குமார் என்பரது ஏடுகளில் 31.12.2016 ஆம் நாளுக்குரிய வங்கி சரிகட்டும் பட்டியல்**

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு | | 7,130 |
| **கூட்டுக:** | | |
| வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது | | 800 |
| | | 7,930 |
| **கழிக்க:** | | |
| செலுத்திய காசோலை வசூலாகாதது | | 1,000 |
| வங்கி அறிக்கையின் படி இருப்பு | | 6,930 |

29. **சில்லறை ரொக்க ஏடு என்றால் என்ன?**

- சில்லறை ரொக்க ஏடு என்பது, அடிக்கடி நிகழக்கூடிய சிறு செலவினங்களான வண்டிச் சத்தம், கூலி, தபால் தந்தி செலவு, அச்சு, எழுதுபொருள் செலவு போன்றவற்றை பதியும் தனி ரொக்க ஏடாகும்.

30. அ) முதல் மீது வட்டி நிறுவனத்திற்கு ஒரு **செலவு** ஆகும்

ஆ) **பற்று பக்கத்தில்** தோன்றும்

## பகுதி - இ

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $7 \times 3 = 21$

31. **பொருத்துகை கருத்து என்றால் என்ன? ஏன் ஒரு வணிக அமைப்பு இக்கருத்தைப் பின்பற்ற வேண்டும்?**

- ஒரு குறிப்பிட்ட கணக்காண்டில் ஈட்டிய வருவாய், அவ்வருவாயை ஈட்ட, அவ்வாண்டில் செய்த செலவுகளோடு ஒப்பிடப்படுவதை இது குறிக்கும்.
- இது நிகழ்வுத் தீர்வு கருத்து, மற்றும் கணக்கியல் காலக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும். கணக்கியல் காலக்கருத்து, நிறுவனத்தின் திறனை அளவிடவும் மற்றும் நிதி நிலையை தீர்மானிப்பதற்குமான காலக்கெடுவை நிர்ணயிக்கிறது.
- குறிப்பிட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அனைத்தும் கணக்கில் கொள்ளப்படாமல், அந்தக் கணக்காண்டிற்குரிய செலவுகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதையும் இது குறிக்கின்றது.
- மேற்கண்ட காரணத்தாலேயே, ஒரு வணிக அமைப்பு பொருத்துகை கருத்தை பின்பற்ற வேண்டும் என சொல்லப்படுகின்றது.



32.

1) $\text{ஆண்டு தேய்மானத் தொகை} = \dfrac{\text{சொத்தின் ஆரம்ப அடக்க விலை} - \text{எதிர்நோக்கும் இறுதி மதிப்பு}}{\text{எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்}}$

$$= \frac{10,000 - 1,000}{10} = \frac{9,000}{10}$$

ஆண்டு தேய்மானத் தொகை = ₹. 900

2) $\text{தேய்மான விகிதம்} = \dfrac{\text{ஆண்டுத் தேய்மானத் தொகை}}{\text{ஆரம்ப அடக்கவிலை}} \times 100$

$$= \frac{900}{10,000} \times 100 = 9\%$$

33.

ப **ரொக்க கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2023 மார்ச் 1 | முதல் க/கு | | 10,000 | 2023 மார்ச் 3 | வாடகை க/கு | | 6,000 |
| 6 | வங்கி க/கு | | 15,000 | 31 | இருப்பு கீ/ இ | | 19,000 |
| | | | 25,000 | | | | 25,000 |
| ஏப் 1 | இருப்பு கீ/கொ | | 19,000 | | | | |

ப **முதல் கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2023மார் 31 | இருப்பு கீ/ இ | | 10,000 | 2023 மார் 1 | ரொக்க க/கு | | 10,000 |
| | | | 10,000 | | | | 10,000 |
| | | | | ஏப் 1 | இருப்பு கீ/கொ | | 10,000 |



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

ப **வாடகை கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2023 மார்ச் 3 | ரொக்க க/கு | | 6,000 | 2023 மார்ச் 31 | இருப்பு கீ/ இ | | 6,000 |
| | | | 6,000 | | | | 6,000 |
| ஏப் 1 | இருப்பு கீ/கொ | | 6,000 | | | | |

ப **வங்கி கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2023 மார் 31 | இருப்பு கீ/ இ | | 15,000 | 2023 மார் 6 | ரொக்க க/கு | | 15,000 |
| | | | 15,000 | | | | 15,000 |
| | | | | ஏப் 1 | இருப்பு கீ/கொ | | 15,000 |

34. **கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக**

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | ₹. 40,000 | = | ₹. 30,000 | + | ₹. <u>10,000</u> |
| (ஆ) | ₹. <u>90,000</u> | = | ₹. 50,000 | + | ₹. 40,000 |
| (இ) | ₹. 80,000 | = | ₹. <u>50,000</u> | + | ₹. 30,000 |

35. ப **தனிப்பத்தி ரொக்க ஏடு** வ

| நாள் | பெறுதல்கள் | பே.ப. எண் | தொகை ₹. | நாள் | செலுத்தல்கள் | பே.ப.எண் | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2020 ஜூன் 1 | இருப்பு கீ/கொ | | 40,000 | 2020 ஜூன் 7 | கூலி க/கு | | 2,000 |
| 5 | சுவாதி க/கு | | 4,000 | 12 | கொள்முதல் க/கு | | 6,000 |
| | | | | 30 | இருப்பு கீ / இ | | 36,000 |
| | | | 44,000 | | | | 44,000 |
| ஜூலை 1 | இருப்பு கீ/கொ | | 36,000 | | | | |



36. **இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.**

| | | |
|---|---|---|
| ஆள்சார் கணக்கு | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
| சொத்து கணக்கு | உள்வருவதை பற்று செய்க | வெளிச் செல்வதை வரவு செய்க |
| பெயரளவு கணக்கு | அனைத்துச் செலவுகளையும், நட்டங்களையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும், ஆதாயங்களையும் வரவு செய்க |

37.

**திருத்தியப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| அ | எடுப்புகள் க/கு ப<br>பயணச்செலவு க/கு<br>( உரிமையாளரின் தனிப்பட்ட செலவு ₹. 200 பயணச் செலவு கணக்கில் பற்ற வைக்கப்பட்டதை திருத்தியது ) | | 200 | 200 |
| ஆ | கணேஷ் க/கு ப<br>ரமேஷ் க/கு<br>(கடனுக்கு ₹. 400 க்கு ரமேஷிடமிருந்து சரக்கு வாங்கியது, தவறாக கணேஷ் கணக்கில் வரவு வைக்கப்பட்டதை திருத்தியது ) | | 400 | 400 |
| இ | சம்பளம் க/கு ப<br>மதி க/கு<br>( மதிக்கு ₹. 500 சம்பளம் செலுத்தியது பேரேட்டில் மதியின் கணக்கில் பற்று வைக்கப்பட்டதை திருத்தியது) | | 500 | 500 |



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

38. இருப்பாய்விற்கும் இருப்புநிலைக்குறிப்பிற்கும் இடையே உள்ள ஏதேனும் மூன்று வேற்றுமைகளைஎழுதுக.

| வ.எண் | அடிப்படை | இருப்பாய்வு | இருப்புநிலைக்குறிப்பு |
|---|---|---|---|
| 1 | தன்மை | இது குறிப்பிட்ட நாளுக்குரிய பேரேட்டுக் கணக்கு இருப்புகளின் பட்டியல் ஆகும் | இது குறிப்பிட்ட நாளன்றைய சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் நிலையைக் காட்டும் அறிக்கை ஆகும் |
| 2 | நோக்கம் | கணக்கியல் பதிவுகளின், கணக்கீட்டு சரிதன்மையை பரிசோதிக்க இது தயாரிக்கப் படுகின்றது | வணிகத்தின் நிதி நிலையை அறிந்துகொள்ள, இது தயாரிக்கப் படுகின்றது |
| 3 | நிலை | இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் முன், தயாரிக்கப்படுகின்றது | இருப்பாய்வு மற்றும் வியாபார இலாப நட்டக் கணக்கு தயாரித்தப் பிறகு தயாரிக்கப் படுகின்றது |
| 4 | கட்டாயம் | இருப்பாய்வு தயாரிக்க வேண்டிய கட்டாயம் இல்லை | சில தருணங்களில், இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது |
| 5 | வரிசை | இருப்புகள் வரிசைபடி ஒழுங்குப் படுத்தப்படவேண்டிய அவசியமில்லை | இருப்புகள் வரிசைபடி ஒழுங்குப் படுத்தப்பட்டுள்ளது |

39. -------------------- என்பவரின் ஏடுகளில், டிசம்பர் 31, 2021 ஆம் ஆண்டிற்கான

ப **மொத்த இலாபம்** வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | | 10,000 | விற்பனை | | 40,600 |
| கொள்முதல் | | 26,100 | இறுதி சரக்கிருப்பு | | 13,500 |
| மொத்த இலாபம் கீ/இ | | 18,000 | | | |
| | | 54,100 | | | 54,100 |

40. பல்வேறு வகையான கணக்கியல் மென்பொருள்கள் யாவை?

1. ஆயத்த மென்பொருள்
2. திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள்
3. உருவாக்கப்பட்ட மென்பொருள்



## பகுதி – ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. ஆ) **இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | கை ரொக்கம் | | 5,500 | |
| 2 | பெற்றதள்ளுபடி | | | 300 |
| 3 | கடனீந்தோர் | | | 15,000 |
| 4 | கட்டிடம் | | 50,000 | |
| 5 | கொள்முதல் | | 49,700 | |
| 6 | தொடக்க சரக்கிருப்பு | | 6,000 | |
| 7 | நேரடி செலவுகள் | | 5,000 | |
| 8 | வெளிதூக்கு கூலி | | 3,500 | |
| 9 | முதல் | | | 45,000 |
| 10 | விற்பனை | | | 59,400 |
| | மொத்தம் | | 1,19,700 | 1,19,700 |

42. அ) **ஜெயசீலியின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2023ஜன 1 | ரொக்க க/கு ப<br>ஜெயசீலி முதல் க/கு<br>( ஜெயசீலி ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 80,000 | 80,000 |
| 2023ஜன 2 | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கக் கொள்முதல் செய்தது ) | | 40,000 | 40,000 |
| 2023ஜன 5 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு<br>( ரொக்கத்திற்கு விற்பனை செய்தது ) | | 60,000 | 60,000 |
| 2023ஜன 8 | அறைகலன் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ) | | 7,000 | 7,000 |
| 2023ஜன 12 | மின்கட்டணம் க/கு ப<br>வங்கி க/கு<br>( மின் கட்டணம் இணையம் வழி செலுத்தியது ) | | 1,000 | 1000 |



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

( அல்லது )

42. ஆ)

**கணக்கியல் சமன்பாடு**

| வ எண் | நடவடிக்கைகள் | சொத்துக்கள் ரொக்கம் ₹. | சரக்கிருப்பு ₹. | வங்கி | = | பொறுப்புகள் முதல் ₹. | வங்கி கடன் ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| அ | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | + 1,50,000 | 0 | 0 | = | + 1,50,000 | 0 |
| | சமன்பாடு | +1,50,000 | 0 | 0 | = | + 1,50,000 | 0 |
| ஆ | வங்கியில் செலுத்திய ரொக்கம் | -60,000 | 0 | + 60,000 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +90,000 | 0 | + 60,000 | = | + 1,50,000 | 0 |
| இ | வங்கியில் இருந்து கடன் பெற்றது | 0 | 0 | + 25,000 | = | 0 | + 25,000 |
| | சமன்பாடு | +90,000 | 0 | + 85,000 | = | + 1,50,000 | + 25,000 |
| ஈ | காசோலை செலுத்தி சரக்கு வாங்கியது | 0 | + 10,000 | - 10,000 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +90,000 | + 10,000 | + 75,000 | = | + 1,50,000 | + 25,000 |
| உ | சொந்த பயன்பாட்டிற்கு ரொக்கம் எடுத்தது | -6,000 | 0 | 0 | = | - 6,000 | 0 |
| | சமன்பாடு | +84,000 | + 10,000 | + 75,000 | = | + 1,44,000 | + 25,000 |
| | சமன்பாடு | +1,69,000 | | | = | + 1,69,000 | |

43. அ)

2017 டிசம்பர் 31- ம் நாளுக்குரிய ரொக்க ஏட்டின் இருப்பு

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|
| வங்கி அறிக்கையின்படியான மேல்வரைப்பற்று இருப்பு | | 6,500 |
| **கூட்டுக:** | | |
| விடுத்த காசோலை, முன்னிலைப்படுத்தப்படாதது | 3,000 | 3,000 |
| **கழிக்க:** | | 9,500 |
| வங்கியில் செலுத்திய காசோலை வரவு வைக்கப்படாதது | 10,500 | |
| வங்கியால் தவறுதலாக பற்று வைக்கப்பட்டது | 500 | |
| வங்கியால் பற்று வைக்கப்பட்ட வங்கிகட்டணம் மற்றும் வட்டி | 180 | |
| நிலை அறிவுறுத்தலின்படி, வங்கியால் செலுத்தப்பட்ட காப்பீட்டு முனைமம் | 100 | 11,280 |
| ரொக்க ஏட்டின்படி மேல்வரைப் பற்று | | - 1,780 |

B.BALAJI , GHSS , PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

( அல்லது )

43. ஆ)

ப பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏடு வ

| பெற்ற தொகை | ரொ. ஏ. ப. எ. | நாள் | விவரம் | சா. சீ. எ. | மொத்தம் செலவழித்த தொகை | பயணச் செலவுகள் | வண்டிக் கட்டணம் | அஞ்சல் செலவு | கூலி | எழுது பொருள் | பல்வகைச் செலவுகள் | பே. ப. எ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2017 | | | | | | | | | | |
| 500 | | ஜன 1 | ரொக்கம் | | | | | | | | | |
| | | 2 | பயணச் செலவு | | 5 | 5 | | | | | | |
| | | | வண்டிக் கட்டணம் | | 12 | | 12 | | | | | |
| | | 3 | அஞ்சல் செலவு | | 15 | | | 15 | | | | |
| | | | கூலி | | 66 | | | | 66 | | | |
| | | 4 | எழுதுபொருள் | | 134 | | | | | 134 | | |
| | | | போக்குவரத்துச் செலவுகள் | | 18 | 18 | | | | | | |
| | | 5 | பழுதுபார்ப்புச் செலவு | | 65 | | | | | | 65 | |
| | | | பயணச் செலவுகள் | | 11 | 11 | | | | | | |
| | | | வண்டிக் கட்டணம் | | 24 | | 24 | | | | | |
| | | | மொத்தச் செலவுகள் | | 350 | 34 | 36 | 15 | 66 | 134 | 65 | |
| | | 5 | இருப்பு கீ/இ | | 150 | | | | | | | |
| 500 | | | | | 500 | | | | | | | |
| 150 | | ஜன 6 | இருப்பு கீ/கொ | | | | | | | | | |
| 350 | | 6 | ரொக்கம் க/கு | | | | | | | | | |

44. அ)

1) ஆண்டு தேய்மானத் தொகை $= \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்க விலை – எதிர்நோக்கும் இறுதி மதிப்பு}}{\text{எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்}}$

$= \frac{50,000-10,000}{10} = \frac{40,000}{10} =$ ₹. 4,000

2) தேய்மான விகிதம் $= \frac{\text{ஆண்டுத் தேய்மானத் தொகை}}{\text{ஆரம்ப அடக்கவிலை}} \times 100$

$= \frac{4,000}{50,000} \times 100 = 8\%$

**குறிப்பேட்டுப்பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2016 ஜன 1 | சொத்து க/கு ப<br>வங்கி க/கு<br>(சொத்து வாங்கியது ) | | 50,000 | 50,000 |
| டிசம்பர் 31 | தேய்மானம் க/கு ப<br>சொத்து க/கு<br>( தேய்மானம் நீக்கியது ) | | 4,000 | 4,000 |
| டிசம்பர் 31 | இலாப நட்ட க/கு ப<br>தேய்மானம் க/கு<br>( தேய்மானம் இலாப நட்ட கணக்கிற்கு மாற்றப்பட்டது ) | | 4,000 | 4,000 |

B.BALAJI , GHSS , PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net

www.Padasalai.Net

| | | | | |
|---|---|---|---|---|
| 2017 டிசம்பர் 31 | தேய்மானம் க/கு ப<br>சொத்து க/கு<br>( தேய்மானம் நீக்கியது ) | | 4,000 | 4,000 |
| டிசம்பர் 31 | இலாப நட்ட க/கு ப<br>தேய்மானம் க/கு<br>( தேய்மானம் இலாப நட்ட கணக்கிற்கு மாற்றப்பட்டது ) | | 4,000 | 4,000 |

( அல்லது )

44. ஆ)

| நடவடிக்கை | வகைகள் |
|---|---|
| (i) ஏற்கனவே உள்ள கட்டிடத்தை கூடுதலாக கட்டையது ₹. 8,000. | முதலினச் செலவு |
| (ii) பழைய மகிழ்ந்து வாங்கியது ₹. 30,000. | முதலின செலவு |
| (iii) புதிய தொழிற்சாலைக்கு வர்ணம் பூசியது ₹. 10,000 | முதலின செலவு |
| (iv) புதிய இயந்திரம் மீதான ஏற்றிச்செல் வண்டி கட்டணம் ₹. 30,000. | முதலின செலவு |
| (v) வாங்கிய பழைய வாகனத்தை பழுது பார்த்தல் செலவு ₹. 1,500. | முதலினச் செலவு |

45. அ) ராமசுந்தரி ஏடுகளில் 2017, டிசம்பர் 31 ஆம் ஆண்டிற்கான வியாபார மற்றும் இலாப நட்ட கணக்கு

ப வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | | 2,500 | விற்பனை | | 7,000 |
| கொள்முதல் | | 3,300 | இறுதி சரக்கிருப்பு | | 4,000 |
| கூலி | | 2,700 | | | |
| மொத்த இலாபம் கீ/இ | | 2,500 | | | |
| | | 11,000 | | | 11,000 |
| சம்பளம் | | 2,600 | மொத்த இலாபம் கீ/கொ | | 2,500 |
| நிகர இலாபம் | | 2,400 | பெற்ற தள்ளுபடி | | 2,500 |
| | | 5,000 | | | 5,000 |



www.TrbTnpsc.com

ராமசுந்தரி ஏடுகளில் 31, டிசம்பர் 2017 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | தொகை ₹. | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| முதல் | 52,000 | | இயந்திரம் | | 52,000 |
| கூட்டுக :நிகர இலாபம் | 2,400 | 54,400 | வங்கி ரொக்கம் | | 6,400 |
| கடனீந்தோர் | | 8,000 | இறுதிச் சரகிருப்பு | | 4,000 |
| | | 62,400 | | | 62,400 |

( அல்லது )

45.ஆ)

இலாப நட்ட கணக்கு

ப வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| அலுவலக வாடகை | | 10,000 | மொத்த இலாபம் கீ/கொ | | 50,000 |
| நிலைச்சொத்தின் மீதான தேய்மானம் | | 8,000 | வட்டி பெற்றது | | 2,000 |
| தள்ளுபடி கொடுத்தது | | 12,000 | தள்ளுபடி பெற்றது | | 3,000 |
| விளம்பரம் | | 4,000 | | | |
| தணிக்கைக் கட்டணம் | | 1,000 | | | |
| வெளித்தூக்கு கூலி | | 2,500 | | | |
| அலுவலக கட்டடம் மீதான காப்பீடு | | 3,500 | | | |
| பொதுச் செலவுகள் | | 3,000 | | | |
| நிகர இலாபம் | | 11,000 | | | |
| | | 55,000 | | | 55,000 |



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**46. அ)**

i) அகிலா கணக்கில் ₹. 270 **பற்று** வைக்க வேண்டும்.

ii) நரேந்திரன் கணக்கில் ₹. 450 **வரவு** வைக்க வேண்டும்.

iii) அறைகலன் கணக்கில் ₹. 36 **வரவு** வைக்க வேண்டும்.

iv) இயந்திரக் கணக்கில் ₹. 2,000 **பற்று** வைக்க வேண்டும்.

v) கொள்முதல் கணக்கில் ₹. 90 **வரவு** வைக்க வேண்டும்.

**( அல்லது )**

**46. ஆ)**

<u>சரிகட்டுப் பதிவுகள்</u>

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| அ) | இறுதிச் சரக்கிருப்பு க/கு ப<br>வியாபார க/கு<br>( இறுதிச் சரக்கிருப்பு பதியப்பட்டது ) | | 2,000 | 2,000 |
| ஆ) | வாடகை க / கு ப<br>கொடுபடவேண்டிய வாடகை க /கு<br>( கொடுபடவேண்டிய வாடகை சரிக்கட்டப்பட்டது ) | | 2,500 | 2,500 |
| இ) | முன்கூட்டி செலுத்திய காப்பீட்டு ப<br>முனைமம் க/கு<br>காப்பீட்டு முனைமம் க/கு<br>( முன்கூட்டி செலுத்திய காப்பீட்டு முனைமம் சரிக்கட்டப்பட்டது ) | | 2,850 | 2,850 |
| ஈ) | முதல் மீது வட்டி க/கு ப<br>முதல் க/கு<br>( முதல் மீது வட்டி சரிக்கட்டப்பட்டது ) | | 11,000 | 11,000 |
| உ) | முதல் க/கு ப<br>எடுப்புகள் மீது வட்டி க/கு<br>( எடுப்புகள் மீது வட்டி சரிக்கட்டப்பட்டது ) | | 1,000 | 1,000 |



**47. அ)**

ப ராஜன் என்பவரது ஏடுகளில் இருபத்தி ரொக்க ஏடு வ

| நாள் | பெறுதல்கள் | இ.எ | பே.ப.எண் | தொகை ₹ தள்ளுபடி | தொகை ₹ ரொக்கம் | நாள் | செலுத்தல்கள் | சா.சீ.எ | பே.ப.எ | தொகை ₹ தள்ளுபடி | தொகை ₹ ரொக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2020<br>அக்1<br>4 | இருப்பு கீ /கொ<br>விற்பனை க/ கு | | | | 37,500<br>33,000 | 2020<br>அக்<br>6<br>12<br>15<br>31 | வேலன் க/கு<br>சுப்பிரமணியன் க/கு<br>விளம்பரச் செலவுகள் க/கு<br>இருப்பு கீ இ | | | 150<br>100 | 15,850<br>14,200<br>1,500<br>38,950 |
| | | | | | 70,500 | | | | | 250 | 70,500 |
| நவ1 | இருப்பு கீ/ கொ | | | | 38,950 | | | | | | |

**( அல்லது )**

**47. ஆ) கணினிமயக் கணக்கியல் முறையின் நன்மைகள் ஏதேனும் ஐந்தினை விவரி**

1) <u>விரைவானசெயல்முறையாக்கம்</u>
- ❖ ஒரு குறிப்பிட்டச் செயலை செய்து முடிக்க மனிதர்களை விட, கணினிக்கு மிகக் குறைவான நேரமே தேவைப்படுகின்றது.

2) <u>துல்லியமான தகவல்</u>
- ❖ கையால் எழுதும் கணக்கியல் முறையில் ஒரு கணக்கியல் தரவு திரும்பத் திரும்ப எடுத்தெழுதுவது போல் இல்லாமல் கணினிமயக் கணக்கியல் முறையில் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் ஒரே ஒருமுறை மட்டுமே பதிவு தேவைப்படுவதால் பிழைகள் ஏற்படுவதற்கு குறைவான வாய்ப்பு உள்ளது.

3) <u>நம்பகத்தன்மை</u>
- ❖ சுவாரசியமின்மை, சோர்வு அல்லது களைப்பு போன்றவை கணினி அமைப்பை பாதிப்பதில்லை. எனவே, மீண்டும் மீண்டும் செய்யும் செயல்களைத் திறம்பட செய்ய முடியும். மேலும், அது அதிகப்படியான நம்பகத்தன்மை கொண்டது.

4) <u>எளிதில் கிடைக்கக்கூடிய தகவல்கள்</u>
- ❖ தகவல்கள் எளிதில் கிடைக்கப் பெறுகின்றன. மேலும், அவற்றை பல்வேறு பயனாளிகளுக்கு ஒரே நேரத்தில் தெரியப்படுத்தலாம்.

5) <u>உடனுக்குடனான தகவல்கள்</u>
- ❖ கணக்கின் இருப்புகள் எப்பொழுதுமே உடனுக்குடனானதாய் இருக்கும்.



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

6) **செயல்திறன்**

- கணினி அடிப்படையிலான கணக்கியல் முறை, நேரத்தையும், வளங்களையும் சிறப்பாக பயன்படுத்துவதை உறுதிச்செய்கிறது.

7) **தேக்ககம் மற்றும் திரும்ப எடுத்தல்**

- கையால் எழுதும் முறையிலுள்ள குறிப்பேடு, பேரேடு மற்றும் கணக்கியல் பதிவேடுகள் போன்ற கணக்கேடுகளை ஒப்பிடுகையில், கணினிமயக் கணக்கியல் அமைப்பில் மிகக் குறுகிய இடவசதியே தேவை.

8) **பணியாளர்களுக்கு உந்துசக்தியாக செயல்படுகின்றது**

- கணினி அமைப்பை பயன்படுத்தும் பணியாளர்கள், பணிக்காக பயிற்றுவிக்கப்பட்டு சிறப்பாக்கப்படுவதனால் தங்களுக்கு அதிகம் மதிப்புள்ளதாக உணர்கின்றனர்.

9) **தன்னிச்சையாக அறிக்கை தயாரிப்பு**

- கணக்கியல் அறிக்கைகளான இருப்பாய்வு மற்றும் நிதிநிலை அறிக்கைகள் தன்னிச்சையாகவே உருவாக்கப்பட்டுவிடும். அவைகள் சுட்டியால் சுண்டியவுடன் எளிதில் அணுகும்படியாக இருக்கும்.

10) **மேலாண்மை தகவல் முறை அறிக்கைகள்**

- கணக்கியல் தகவல் முறையினால் உருவாக்கப்படும் நிகழ்நேர மேலாண்மை அறிக்கைகளை பயன்படுத்துவதனால், வணிகத்தைக் கண்காணிப்பதும் கட்டுப்படுத்துவதும் எளிதாகின்றது.

B.BALAJI , GHSS , PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net